# மனச் சிமிழ்

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-625021

★

கலைவாணன்

★

புதுப்புனல் பதிப்பகம்
திருச்சி-2.

முதற் பதிப்பு ஜூன் 1956
இரண்டாம் பதிப்பு டிசம்பர் 1958

121256
031:1xN5
J86;1

விலை ரூ. 1—00

கண்ணன் பிரஸ், மலைவாசல்,
திருச்சி-2.

# முதற் பதிப்பின் பதிப்புரை

பல்லாண்டுகளுக்குமுன் பத்திரிகைகளில் **கலைவாண ணின்** கவியமுதச் சிறுதுளிகளைப் பருகிச் சுவைத்த நுண் மாண் நுழைபுல நண்பர்கள் அவரை "இந்த நூற்றாண்டின் இடைப் பகுதியில் இணையற்ற கவிஞர்" என்றும் "தமிழுக் குப் புத்துயிரும், புது வாழ்வும் தந்தவர்" என்றும் புகழ்வ ராயினர்.

கலைவாணன் காவியத் தொகுதி வெளியிடவேண்டும் என்னும் வேண்டுகோள்களும், ஆணைகளும் தமிழகத்தின் பல பகுதிகளிலுமிருந்து வரத் தொடங்கின.

அதுபோது கவிஞன் பழம் கவிதைகளின் படிகள் கிட்ட வில்லை. நண்பர்களின் அரிய முயற்சியினால் பெரும்பா லான கவிதைகள் கிடைத்துள்ளன. சில அருமையான கவிதைகள் இன்னம் கிடைக்கவில்லை. கவிதையை அடிப் படைப் பொருளாகக் கொண்ட சிறு கவிதைகள் மட்டும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. "காசுக்கா" என்னும் கவிதைமட்டும் விதி விலக்கானது. தமிழகத்தில் உணர்வுக் கிளர்ச்சி உண்டாக்கிய அப்பாடல் நண்பர்களின் வேண்டுகோட்கேற்பச் சேர்க்கப்பட்டுள்ளன.

"**சங்கமம்**"—பத்திரிகைகளில் வெளிவராத பாடல்— சாவை நிலைக்களனாகக்கொண்ட அதன்கண் இழிப்பை யும் சுவையாக மாற்றும் மகாகவிஞனின் கைவண்ணத் தைக் காண்பீர்கள். மற்றவை எல்லாம் தமிழக ஏடு களில் வெளிவந்தவை.

பழந்தனம் இழந்தவர் மீண்டுமது படைத்ததுபோன்ற மகிழ்வோடு இதனைத் தமிழன்பர் ஏற்பர். கலைவாண னின் மற்றைய பெரும் காவியங்களையும், சிறு காவியத் தொகுதிகளையும் படைப்பதற்குமுன்—முதற் காணிக்கை யாகத் தமிழன்னை திருவடிகளில் இதனை சமர்ப்பிக் கின்றோம்.

என்றுமுள தென் தமிழ்க் கன்னிஇம் **மனச்சிமிழிலுள்ள** முத்தாரத்தை ஏற்றருள்க.

நண்பர்கள்,

திருச்சிராப்பள்ளி.
1—6—54.

வித்வான் **துரைசாமி**
**சக்தி நரசிம்மன்.**

## புதுப்புனல் பதிப்புரை.

கவிஞர் கலைவாணன், இயற்றிய "மனச்செமிழ்" கவிதை தொகுப்பின் இரண்டாவது பதிப்பை புதுப் புனல் கவிதை நூல் வரிசையில் ஒன்பதாவது நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகிறோம். முதல் எட்டு நூல்களையும் ஏற்று மகிழ்ந்த தமிழகம் இதனையும் ஏற்று மகிழுமாக.

1, டிசம்பர் 58. புதுப்புனல் பதிப்பகம்.

# மனச் சிமிழ்

அற்புதங்கள் பலபுரியும்
ஆற்றலுட னேபிறந்து
கற்பனையின் புதுமையெலாங்
கைவலிமை கொண்டமைத்து
விற்பனர்கள் கைகூப்பி
விருதுசொல வாழ்ந்திடுமோர்
சிற்பியின்கைச் சிமிழ்:துஎன்
சீவனுள்ள இருதயங்காண்

பன்னிறத்தில் பல்லுருவில்
பளபளக்கும் ஒளிசிதற
இன்னலினும் இன்பினிலும்
எழுந்துருண்டு பலபலவாய்
தன்னிறைவுக் காற்றுமல்
தளதளத்துப் பளபளக்க
என்னிதயச் சிமிழுக்குள்
இருப்பவைதா னிம்மணிகள்.

கனத்திருக்கும் உள்ளுணர்ச்சிக்
கற்பனையின் கதிர்விசிறத்
தனக்குவமை யற்றொளிரும்
தனிமணிகள் விண்மீன்கள்
எனச்சிதறு மழகொளியை
இங்குனக்குங் காட்டுதற்கென்
மனச்சிமிழைத் திறக்கின்றேன்
மானுடமே! பாரிதனை.

சேலிசெய்யும் நண்பர்களே!
கெக்கலித்துக் கைகொட்டிக்
கேவலமாய்ப் பேசுவதேன்?
தேவநிலை எய்தியதால்
பாலினிலும் வெள்ளியதாய்ப்
பளிங்கினிலும் தூயதெனப்
பளபளக்கும் என்னுளத்தைப்
பார்த்துவிட்டுப் பேசுங்கள்!

பின்நகரும் நேயர்களே!
பித்தனென்று ஏதேதோ
பிரியமற்றுப் பேசுவதேன்?
பிழை இறந்த பெருநிலையில்
என்னறிவு முன்னேறி
எட்டரிய கற்பனையின்
இமயத்து முடிமிசையே
ஏறுதல்கண் டேசுங்கள்!

தூற்றுகின்ற தோழர்களே!
துடிதுடிக்கும் படபடப்பில்
தோன்றியதெல் லாசம்பேசத்
துணிந்துவிட்ட ராலும்
ஆற்றல்மிகுஞ் சொற்களினல்
அமருலகை இப்புவியில்
அமைக்கவரும் என்வலிமை
அறிவறிந்து தூற்றுங்கள்!

*　　　*　　　*

அதற்கதிக மாகவல்ல
ஆம்! எனக்கோர் சாமந்தான்
அமைதிநிலை கிட்டுமெனில்
அத்தனையும் மாற்றிவிட்டு
எதற்கும்மிக மேலான
இனியதுவாய், இன்றொன்றை
ஈசனுந்தன் தலைகுனிய
இவ்வுலகி லேபடைப்பேன்.

ஆட்டிவிட்டுக் கோள்களெல்லாம்
ஆடஅதற் கப்பாலாய்,
அகிலாண்ட மேட்டினிலே
ஆடுகின்ற பரமசிவன்
நாட்டியத்துக் கேற்றதிரு
நடனசபை என்னுளமாய்—
நானவனாய் விட்டதன்பின்
ஈனநிலைக் கிடமேது?

உண்மையில்நான் வேண்டுவது
ஒருசாமந் தானெனினும்
உம்பருக்கும் எட்டரிய
உன்னதங்கள் யாவுமிதில்
மண்ணிடையே தோன்றிவிடும்
மாவலியுண் டாகிவிடும்.
மானிடர்கை தொழுமமர
மோனநிலை யதுதானே!

*   *   *

பழகிடுநம் நெஞ்சத்துப்
பரிவிடையே வாழ்ந்தாலும்
பண்பாட்டின் மத்தியிலே
பண்டிருந்து வந்தாலும்
அழகதனால் நம்வயிற்றுக்
கணுவளவும் குணமில்லை.
ஆம்! அதுநம் தேவைகளுக்
கப்புறத்தி லேயுளது.

ஆற்றலுடன் மாந்தர்வலி
ஆணையிடப் பூதங்கள்
ஐந்துமவன் ஏவல்செய
ஆளாகித் தாள்பணியும்
மாற்றரிய அணுவலியும்
மண்டியிட்டுக் கைகூப்பும்.
மண்ணறிவின் விஞ்ஞான
மாட்சிமையின் காதையிது.

ஏவலிடும் மாந்தர்குரல்
இட்டபணி தொட்டவர்தாம்
எண்ணுமன மெண்ணியதை
எண்ணியவா றுக்கிவிடும்
ஆவலினல் காத்திருக்கும்
ஐந்துபெரும் பூதங்கள்
அன்னவற்றல் நமக்கிங்கே
ஆனபயன் பலவுண்டு.

இங்கிதுபோல் எழிலதனால்
எப்பயனும் நமக்கில்லை
என்றாலும் மானுடத்தின்
இளமையிலே வளம்பெற்று
மங்காமல் ஏகாந்த
மத்தியிலே வானின்பை
மண்ணிடையே காட்டுமது
மற்றதற்கும் மேலதுதான்.

* * *

கண்ணிவந்து மாலையிடும்
நாதனொடு மாதனையும்
நாளிலவன் நாட்டத்தே
நளினமெலாந் தோன்றிடினும்
கண்ணினொளி காட்சியல்ல.
காதலியும் காதலல்ல.
கவிதையல்ல என்னுளத்துக்
கற்பனையும் சொற்பொருளும்.

கருப்பொருளன் றென்றாலும்
காந்துமெழிற் கனல்வழியே
திருப்பிவைத்த பக்கமெலாந்
திருவிளக்க மொளிவிசிறி
இருப்பதனைக் கண்ணறிய
எடுத்தெடுத்துக் காட்டிவிடும்
உருப்பெறுவ தென்றாலும்
உற்றமுத லதுவன்றே.

கானம் இசைக்குமனம்
கற்பனையாழ் மீட்டஅதில்
கவிதை மலர்ந்ததுவும்
கனவுகள் தாம் பாலமிட்டு
வானத் தளவுயர்ந்த
வையகத்தி னிச்சைகளை
வாயிற் படியேறி
வாங்கியதும் இங்கிதில்தான்.

கற்பனையின் பாதையிலே,
காரிருட்டின் மத்தியிலே,
கையால் நிலந்தடவிக்
கவிராயன் நான்புகுந்தவ்
வற்புதத்தைக் கண்ணுற்றேன்
அகல்விளக்கைத் தூண்டிவிட்டே
அப்புறம்போய் ஒன்ருகி
அத்துவித நிலையடைந்தேன்.



# கவியின் குரல்

கோடையின் வெந்தழல்
கொஞ்சங் குறைந்திடக்
கொண்டல்கள் விண்ணிலே
கூடிக் குதித்தன
ஓடையின் வெண்மணல்
சூட்டைத் தணித்திடும்
உள்ளத் துடன்புது
வெள்ளம் புரண்டது.

காட்டையும் தேக்கிடும்
மேட்டையும் தாண்டியும்
கல்லையும் முள்ளையும்
தள்ளிமுன் னேறியும்
பாட்டுடன் இன்னிசை
மீட்டியும் வெண்மணல்
பாட்டையில் ஆற்றுநீர்
ஓட்டம் பிடித்தது.

நஞ்சைகள் தம்முடன்
கொஞ்சிக் குலாவிட
நதியின் புதுப்புனல்
சதிராடி வந்ததும்
அஞ்சிக் குலைந்ததம
நெஞ்சங் குளிர்ந்ததை
அன்போ டணைத்துமெய்
இன்பிற் கலந்தது.

அண்டையில் பூங்கொடிப்
பெண்டுகள் யாவரும்
அலரென்ற செம்மதுக்
கலசத்தி லூத்தர
வண்டொன்று வந்ததைக்
கொண்டுண்ட இன்பிலே
வானத்து வீதியில்
கானம் இசைத்தது.

வெளிரிட்ட மாமரம்
துளிர்விட் டெழுந்தது
வெம்பிட்ட முல்லையும்
பம்பிக் கிளைத்தது,
களிகொண் டுலாவிடும்
குளிர்கொண்ட காற்றிலே
காசினிப்பெண் எழில்
காட்டிக் குதித்தனள்,

ஆங்கந்த ஓடையின்
பாங்கில் உயர்ந்ததோர்
அந்தியின் செங்கனிக்
கொத்துகள் தொங்கிடும்
பூங்கிளை யுற்றதோர்
மாங்குயில் எங்கணும்
புத்தெழில் பூரணம்
பொங்குதல் கண்டது

கற்பனை வித்திடும்
அற்புதப் பித்திலே
கண்கண்ட காட்சிகள்
பண்கண்ட நெஞ்சிலே
பற்பல எண்ணங்கள்
உற்பவஞ் செய்திடப்
பண்கொண்ட இன்னிசை
மண்கொள்ள வந்தது.

வாயில் சுவைமது
பாயும் மயக்கிலும்
வண்ணப் புதுமலர்ப்
பெண்ணின் அணைப்பிலும்
தோயுண்ட தன்மனம்
மேயும் சுகத்திலும்
தும்பியின் பாட்டிலே
துக்கம் தொனித்தது.

ஓடிப் புரண்டிசை
பாடிக் குதிக்கினும்
உள்ளத் துணர்ச்சிகள்
துள்ளிக் கிளம்பினும்
பள்ளத்தி லேசெலும்
வெள்ளப் புதுப்புனல்
பாட்டில் ஒழுங்கிசை
கூட்டத் திறனிலை.

மண்ணை மயக்கிடும்
விண்ணிசை ஆயினும்
மாங்குயில் பாட்டிலே
தேங்கும் கருத்தினை
எண்ணம் அறிந்திடும்
வண்ணம் அமைந்திட
இல்லை—அப் பறவையின்
சொல்லையார் கண்டது?

காலமென் னும்எழில்
வாலைக் குமரியாள்
காசினி மேல்காம
வீசிக் குதித்திடும்
கோலச் சிறப்பைஓர்
மூலை முடுக்கிலே
குந்திக் கிடந்தவன்
சிந்தையும் கண்டது.

புந்தியை வித்தையாய்
வந்துமுத் தாடியே
புத்துணர் வொன்றுதன்
சித்தத்து வீணையின்
தந்தியை உந்திடச்
சந்தங்கள் ஆயிரம்
தண்டமிழ்ப் பாவுருக்
கொண்டுமுன் வந்தன.

ஆம்! அவன் தான்கவி
நாமகள் காதலன்
ஆழிசூழ் மண்ணகப்
பாழில் உழன்றிடும்
பாமரர் நெஞ்சிலே
கோமளம் தோன்றிடப்
பாவினம் நூல்களில்
பாவிடும் நாலவன்.

இன்னிசை சொற்களில்
பின்னிக் கிடப்பதாய்
எங்கணும் கற்பனை
பொங்கிக் கலப்பதாய்க்
கன்னங் கருமுகில்
மின்னல் சுளிப்பெனக்
கவியின் குரல்புவிச்
செவியில் நுழைந்தது.

மண்ணுந்த மானிடன்
பண்ணில் குழைந்தது
மக்கள் மனத்துயர்
பொக்கென்று வீழ்ந்தது
எண்ணம் அதன்சுவை
உண்ணக் கிடைத்திடும்
இன்பக் கிளர்ச்சியில்
தென்புற்று நின்றது.

புவியில் நிதம்புதுப்
புனல்வழிந் தோடிஎன்?
பொன்வண் டிசைத்துமென்?
பூங்குயில் பாடிஎன்?
கவிஎன்ற மானிடன்
நவில்கின்ற சொற்கள்போல்
காலத்தை வென்றவை
ஞாலத்தில் நிற்குமோ?



# வேதனை

முள்ளும் புதர்களும் சூழ்ந்து
மூடிய சந்துக ளூடே
குள்ள நரியென மெள்ளக்
கூனிக் குறுகிப் பதுங்கிக்
கள்ளப் புருசனைத் தேடிக்
கால்கள் தள்ளாடத் தனியே
நள்ளிருட் போதினில் இன்பை
நாடிஎங் கோசெலும் பெண்போல்

காதற் கணவனைக் கூடும்
காலத்தில் பட்ட கருப்பம்
மாதமீ ரைந்தில் கனத்து
மல்லிகை மெல்லுடல் மங்க
வாதனை ஆயிரம் செய்ய
வாழ்வினில் மூண்டு தடுக்கும்
வேதனை யாவையும் பிள்ளை
வேட்கையில் தாங்கிடும் தாய்போல்

தீயினில் பட்ட புழுவாய்த்
தேகம் கரத்தில் துடிக்க
வாயில் கசக்கும் மருந்தை
வார்க்கச் சகித்துக் குடித்துப்
பாயில் கிடந்தும்பின் வாழ்வின்
பற்றினில் யாவையும் தாங்கும்
நோயின் கொலைக்கரம் பற்ற
நொந்தவன் சிந்தனை யைப்போல்

அஞ்சி ஒடுங்கிக் கிடந்த
ஆசைப் பிசாசினை உந்தி
நெஞ்சினி லேதலை நீட்டி
நீண்ட நினைப்பினைத் தேக்கிப்
பஞ்சில் நெருப்பெனப் பட்டுப்
பற்றிக் கிளைத்த உணர்ச்சி
விஞ்ச அதைக்கவி யாக்கும்
வேட்கையில் வேதனைப் பட்டேன்.



# எண்ணக் கருக்கல்

எண்ணக் கருக்கலில் மின்னும்
ஈசன் இருப்பிட மென்னும்
விண்ணின் திரையை விலக்கு
வேற்றவர் நாற்றந் தடுக்க
வண்ணக் கதிர்ப்பிரம் போடு
வாசலில் மெல்ல உலாவும்
வெண்ணில வேசிறி தேனும்
விண்ணின் திரையை விலக்கு.

மண்ணின் மடியில் பிறந்து
மங்க மனத்திடைப் பொங்கும்
எண்ணிக் கணக்கிட வொண்ணு
இச்சையின் மச்சிடை ஏறி
கண்ணைக் கவலையில் தேக்கிக்
கையைத் துணைபெறத் தூக்கி
விண்ணைக் கதிஎல வேட்கை
வேண்டத் தவங்கிடக் கின்றேன்,

காந்தியும் சாந்தியும் கூட்டி
கற்பனை விட்டுக் கரைதது
மாந்தர்கள் மார்பிடைப் பூச
மல்லிருள் மத்தியில் கையில்
ஏந்தித் திசைக்கரை ஏறி
இவ்விதம் வானக் கடலில்
நீந்தி வரும்வெண் நிலாவே!
நின்றெனை யும்அழைத் துப்போ.

நெஞ்சத்து வீணை நரம்பை
நின்னொளிப் பொற்கரம் நீவ
விஞ்சி எழுந்து விரிந்த
விந்தை இசையில் மயங்கிக்
கெஞ்சுகி றேன்உனைப் போலக்
கீழிருந்தே விண்ணில் தாவ
அஞ்சுவ தேன்? வரின் அங்கே
ஆரும் எனைத்தடுப் பாரோ!

கார்முகில் மாமலைக் காட்டில்
காமங் கனக்கப் பருத்த
மார்பிடை விண்ணில் மலர்ந்த
மல்லிகை ஆரம் துலங்கப்
பார்மிசை என்செவி கேட்கப்
பாடிக் குதிக்கும்அப் பாவை
யார்? அவள் இன்பினைத் தேடி
யான்அவ் விடம்வர லாமோ?

அற்பச் செயல்கள் அலைக்க
அன்பினை ஆசை கலைக்க
பற்பல நாட்கள்இப் பாரில்
பாழ்பட் டழிந்தது போதும்
கற்பனை கூட்டிடு மாந்தர்
கண்ணொளி மீறிய விண்ணின்
அற்புத மானநின் சாந்தி
ஆலயத் துள்புக ஆசை.

நின்புறம் நீண்டு மறைக்கும்
நீலத் திரையை விலக்கில்
இன்பினைத் தேடி இளைத்தே
ஏங்கிடும் மானிடர் தேங்குந்
துன்பைத் துடைத்திடத் தோற்றித்
தோத்திரம் பாடித் துதிக்கும்
அன்பெனும் அம்பல வாணர்
ஆடும் சிதம்பரங் காண்பேன்.



# கவிதையின் பிறப்பு

காதிரண்டும் செவிடாகிக்
கண்குருடாய்ப் புலன்களெலாம்
பேதித்து நிலைமாறிப்
பின்னுக்குச் சென்றுவிட
ஏதினிலும் செல்லாமல்
என்னிதயம் துஞ்சிவிட
மேதினியில் வாழ்ந்தாலும்
மெல்லமன மிறந்துறங்கும்
போதினிலே, சவமாகப்
போதத் துயில்புரியும்
ஆதிப் பரமசிவ
மாகியஎன் நெஞ்சினிலே
சோதிக் கதிர்விசிறுஞ்
சொக்கழலாய்க் கக்கிருளில்
நாதியற்ற கருங்குறத்தி
நடந்துவிளை யாடிடுவாள்.
பாதியிலே வந்துநின்ற
பாழினிலே கூத்தாடும்
மாதினிடக் கால்படவும்
மாண்டவுயிர் மீண்டுமெழக்
காதினிலே கேட்டதையும்
கண்களிலே கண்டதையும்
ஓதிடுவேன், இவைகளைத்தாம்
உலகம் "கவிதை"யெனும்,

# போய் வா!

என்னுள் பிறந்த குமாரியே!
ஏழைக் கவிஞனின் செல்வமே!
தன்னந் தனிமையில், இப்பெருந்
தாரணி எங்கணும் போய்வரத்
தன்னுளந் துள்ளக் கிளம்பியுன்
தந்தை,என் பக்கலில் வந்தொரு
புன்னகை காட்டிப் புறப்படும்
பொற்புடைக் கற்பனைச் சிற்பமே!

சின்னஞ் சிறுமியே ஆயினும்
சித்தம் துணிந்து திடத்துடன்
கன்னிப் பருவக் கவின்பல
காட்டிடு மேனி குலுங்கிட,
அன்ன நடைநடந் தெங்கணும்
ஆனந்த மாய்ச்சென் றுலாவிடத்
தன்னுளந் தூண்டத் தனித்தெழும்
தண்டமிழ் தந்தஎன் தெய்வமே!

மக்களைக் கூடிக் குலாவவும்
மாநில மெங்கும் உலாவவும்
திக்கெட்டி லும்சென்று மேவவும்
தேசமெலாம்புகழ் தூவவும்
தக்கவர் பால்சென்று கூடவும்
தாவும், என் அன்புக் குமாரியே!
மிக்கச் சிறியபெண் பிள்ளைநீ
மேதினிப் பாங்கை அறிவையோ!

ஆர்வத் துடிப்புடன் மெல்லென
ஆனந்த மாய்அசைந் தாடிநீ
ஊர்வழிப் போகையில் உன்னிடம்
உற்றவர் போல்சில துஷ்டரும்
பார்வையைத் தேக்கும் பகட்டுடன்
பற்பல பேசிப் பசப்புவார்,
யார்அவர் என்பதைத் தேர்ந்திடில்
யாத்திரை சற்று லெகுப்படும்.

வேசைஎன் றெண்ணி விலைபெற
வெள்ளியும் தங்கமு மாகிய
காசைக் கலகல வென்றுநின்
காலடியில் சிலர் கொட்டுவார்,
ஆசையைக் காசுக் கழைத்திடும்
அற்பர் அவர்தரும் தோழமைத்
தூசைத் துடைத்தவர் கண்படாத்
தூரத் தொலைவில் நடந்துசெல்.

தந்திர மான மொழிகளால்
தன்னலம் கோரித் தரணியை
அந்தக மாக்கியோர் பந்தென
ஆட்டும் அரசியல் வாதிகள்.
வந்துனைக் கண்டு வலுவிலே
வாஞ்சை மொழிபல பேசுவார்.
சிந்தைத் தெளிவுட னன்னவர்
சேர்க்கையை விட்டே அகன்றுசெல்.

காமங் கலந்த களிப்பினைக்
காலித் தனமென ஏசுவோர்.
கோமளத் தின்குணம் விட்டதன்
குற்றங் குறைகளைப் பேசுவோர்,
நேம விதிகளுக் கஞ்சுவோர்,
நீதி நெறிகளைக் கெஞ்சுவோர்.
பாமரர் காணிவர் கண்ணமைப்
பார்ப்பதும் பாவம். ஒதுங்கிடு.

கண்ணின் ரசிப்பை இழப்பதால்
காண்ப தெலாங்குறை என்பவர்,
பெண்ணின் பெருமை அறிந்திலாப்
பேடிக் குணத்துடன் பேசுவோர்,
மண்ணினை மாய மெனச்சொலி
மற்றெதை யோநினைந் தேங்குவோர்,
எண்ணக் கிறுக்கர்—இவர்கள்போல்
இன்னும் பலர்நம் எதிரிகள்.

இத்தனை யும்கடந்து அப்புறம்
இன்னும் தொடர்ந்து நடப்பையேல்
சித்தங் குழைந்துனைச் சேர்ந்திடச்
செந்தமிழ்ச் செய்யுள் ரசித்திடும்
வித்தக ருஞ்சிலர், மானிட
வீதியில் வந்துனைக் காணவும்
மெத்தப் பரிவுடன் பேசுவார்
மேலவர், ஆமிவர் தானறி.

குற்றங் குறைகளை வீணிலே
குன்றெனக் கூட்டி யுரைத்திடும்
சிற்றறி வாளர்க ளன்றிவர்
சிந்தனை தேர்ந்த ரசிகர்கள்.
நற்றமிழ்க் காவனி லுன்னுடன்
நாளும் நடந்தே உலாவிட
உற்ற துணையிவர் தாம்.பிற
உள்ள தெலாம்நமக் கல்லவே.

குச்சுக் குடிசையும் வானுயர்
கோபுர வாயில்கள் கூடிய
மச்சிடை மாடமும் கூடமும்
மாந்தர் கண்கொண்டு மயலுற
அச்ச மிலாமல் நடந்துவா!
ஆசைக் கவிதைக் குமாரியே!
இச்சக மெங்கணும் சுற்றிவா!
இங்ஙன மேசென் றுலாவிவா!



# உலாவிடுவேன்

ஏட்டுப் புலவர்சொலுக் கெட்டா அழகுடனே
நாட்டுப் புறத்துறையும் நன்செய் வயல்களிலும்
இச்சையுடன் வானுலகை எட்டிப் பிடிக்கமலே
மச்சினிலே கைநீட்டும் மல்லிகைப்பூங் காவினிலும்
சித்தத் தெளிவில்லார் சிந்தனையைப் போல்வீணே
கத்திக் குதிக்கின்ற கடலின் கரைகளிலும்
இன்னல் மறந்துலகம் இன்பத் துயில்புரியும்
கன்னங் கருக்கிருளில் கண்சிமிட்டும் மீனொளியில்
சந்தனமும் பாடகமும் சாந்தியுடன் சேர்ந்தவெளி
தந்துதவ வானுலவும் தண்மதியின் வெண்ணிலவில்
வெய்யில் கதிர்க்கரங்கள் வீசி நடைநடந்து
வையத் திருள்அகற்ற வந்தொளிரும் வெஞ்சுடரில்
பெண்ணுலகில் பேரழகி பிரியா தவளான
எண்ணமெனும் என்னுடைய இல்லாள் தொடர்ந்துவரக்
கள்ளமில்லா நெஞ்சுடனே கத்திக் குதித்தாசைப்
பிள்ளைஅவள் கைப்பற்றிப் பின்னே நடந்துவர
வேண்டியபோ துள்ளுணர்ச்சி தூண்டியவா றெல்லாம்
நீண்டமதிக் கோலுடனே நித்தம் உலாவிடுவேன். [என்

# யாத்திரை

கடந்தபல நாட்களெனும்
காற்சுவடே அடியடியாய்
நடந்துவரும் வாழ்க்கைவழி
நடுவினிலே பதிந்துவிட
இடம்பெயர்ந்து விதியழைக்க
எங்கேயோ செல்லுமெனத்
தொடர்ந்துவந்த தோழா! ஏன்
துயரடைந்து தேங்குகின்ருய்!

தப்படிக்குத் தப்படிவீண்
தாமதமேன் செய்கின்ருய்?
அப்படியும் இப்படியும்
ஆடியசைந் தலட்சியமாய்
இப்படியே போனேமேல்
எண்ணியதை எய்திப்பின்
எப்பொழுது நாம்திரும்பி
ஏகுமிடம் ஏகுவது?

காலையிலும் மாலையிலும்
கங்குலிலும் வெய்யிலிலும்
வேலையிலும் வெற்பினிலும்
விண்வழியும் மண்வழியும்
பாலையிலும் சோலையிலும்
பருவமெலாம் இல்வாழ்க்கைச்
சாலைவழிச் செல்வதில்நீ
சலிப்படைந்து விட்டாயோ?

அடைத்துவைக்கப் போட்டதுபோல்
அடுக்கடுக்காய் முட்கள்பல
இடைத்தடையாய் நடைதளர
இருந்ததலால் இதுவரையில்
படைத்துவிட்ட நாள்முதல்இப்
பாழ்வெளியில் தொடர்ந்துவரும்
நடைத்துணைவா! இங்கிதிலே
நாம்புதிதாய் எதைக்கண்டோம்?

தூண்டுமனத் திச்சைகளின்
துன்பமெலாம் இன்பாக
நீண்டவழிப் பாதைஇதில்
நித்தம் நடக்கின்றோம்
வேண்டியஅச் சாந்தியினை
வேட்டணையும் ஆசையினால்
மாண்டுவிழும் நாள்வரைஇம்
மாதிரியே செல்வோமோ?

நண்ணிஎதை யோஅடையும்
நப்பாசை உந்திவிடக்
கண்ணறியாப் பாதைஇதில்
காலமெலாம் செல்லுகிறோம்
எண்ணியவெல் லாம்மனதில்
எண்ணியவா றுமென்றால்
மண்ணில்நமை யாட்டும்விதி
மாண்பிழந்து போகாதோ!

# சாந்தி

வானத்தை எட்ட வளர்ந்த மலையிடை
வரய்பிளக் கும்குகையின்
மோனத்தில் சாந்தி முனைத்திருக் குமென னும்
மோகத்தி னுட்புகுந்தேன்
ஈனக் கொலைத்தொழில் ஏற்றதற் குள்ளே
இருந்த ஒருகடுவன்
போனதுங் கோபப் பொருமலுடன்உயிர்
போக்கிடத் தாக்கியதே.

வண்ணக் கதிர்பல மண்ணுக் கிறைத்திடும்
வானப் பெருவெளியில்
எண்ணம் விரும்பிய சாந்திஎங் கேனும்
இருக்கும் எனப்பார்த்தேன்
விண்ணி லிருந்திடி வீசி எனதுயிர்
வீழ்த்தும் நினைப்புடனே
கண்ணைப் பறிக்குமின் கள்ளச் சிரிப்புடன்
கார்முகில் சீறியதே.

வெள்ளிதழ் மல்லிகை நள்ளிர வில்மணம்
வீசும் புதர்நடுவே
உள்ளம் விரும்பிய சாந்தி இருக்குமென்
றுன்னிஉள் ளேநடந்தேன்.
துள்ளிக் கொடுவிஷம் தோய்ந்த தலையினைத்
தூக்கிஓர் நாகமதன்
பள்ளத்தினின் றெழுப் பார்த்ததும் நீண்டுடம்
பாய்ந்துமுன் னேறியதே.

# உயர்ந்தவர் யார்?

கடவுள் கவிஞனை இக்
காசினியி லேபடைத்தான்
கவிஞன் கடவுளைத்தன்
கற்பனையி லேபடைத்தான்,
கடவுள் உயர்ந்தவனாய்க்
ககனத்தே வீற்றிருந்தான்
கவிஞன் அவனிடம்தன்
கைவரிசை காட்டவந்தான்.

கடவுள் கவிஞனுரம்
காணமிகச் சீறிட்டான்
கவிஞனதைக் கருதாமல்
கடவுள்நிலைக் கேறிட்டான்
கடவுள் வருங்கவிஞன்
காலைத் தடுத்திட்டான்
கவிஞன்அத் தடைகளைத்தன்
கையால் எடுத்திட்டான்.

கடவுள் கவிக்கின்னல்
கணக்கின்றி மூட்டிவிட்டான்
கவிஞன் அவற்றைவெறுங்
கனவாக்கி ஏட்டிலிட்டான்.
கடவுள் கவிவாழ்வைக்
கவியாக ஆட்டிவிட்டான்
கவிஞன்தன் பாழ்நிலையைக்
காட்டாமல் போட்டியிட்டான்.

கடவுள் உயிருடலைக்
களிமண்ணால் அமைத்திட்டான்
கவிஞன் தன் கவிதைகளைக்
கற்பனையால் சிருட்டித்தான்.
கடவுள் படைத்தவெலாம்
காலத்தால் மாறியது
கவிஞன் படைப்புகளோ
காலத்தை மீறியது.

கடவுள் இப் பந்தயத்தில்
கவிஞனிடம் தோற்றுவிட்டான்
கவிஞன் தான் வெற்றிபெறக்
களிப்புடனே முன்வந்தான்.
கடவுள் தன் தோற்பஞ்சிக்
கண் காணு தோடிவிட்டான்.
கவிஞன் நான் உன் தீர்ப்பைக்
காதாறக் கேட்பதற்கு

கடவுளைப்போல் ஆலயத்துள்
காரிருளில் பதுங்காமல்
கருத்துடனே கேட்கின்றேன்:
காசினியே! பதில்கூறு!
கடவுள் உயர்ந்தவனு?
கவிஞன் உயர்ந்தவனு?
காசினியே! பெரியவர்யார்?
கூசாமல் பதில்கூறு!

# கவிஞனுக்கு

ஏட்டைக் கிறுக்கிக் கிழித்ததை
    எட்டத் தெறிந்தொரு கட்டிலில்
நீட்டி நிமிர்ந்து படுத்துவீண்
    நித்திரை செய்யுங் கவிஞனே!
வீட்டினை விட்டு வெளிப்புறம்
    வீதியி லேசற்று வந்துபார்!
பாட்டி லெழுதிஎக் காலமும்
    பார்க்கத் தகுந்ததிக் காட்சிகள்!

ஆயிரம் இன்னல் அரிக்கலாம்
    ஆயினும் என்ன கவிஞனே!
கோயில் சிலையல மூலையில்
    கூம்பிக் கிடக்க மனிதர்நாம்
பாயினை விட்டே எழுந்துவா!
    பாரில் கிடைத்ததைப் பற்றலாம்
வாயில் கதவைத் திறந்துபார்!
    வானில் சிறந்ததிவ் வையகம்.

இன்றைக்கே இங்குன் எதிருள
    இன்பினை வீட்டெந்த நாளிலோ
சென்றதை வீணிலே சிந்தனை
    செய்வத னல்பல னெய்தவோ!
குன்றிக் குறுகிய நெஞ்சொடு
    கூம்பிக் கிடக்கும் கவிஞனே!
நன்றிதோ வீதியில் வந்துபார்
    நாள்புதி தொன்று பிறந்தது.

கானில மென்னுமிச் சாலையில்
நம்முடன் யாத்திரை செய்திடும்
மானிட ரில்சுகக் கள்ளினை
மாந்திக் களிப்பில் மயங்கிடும்
ஞானியைப் பாடுவோம் இன்பினில்
நாளை நடப்பை மறந்ததாய்
மேனி குலுங்கிடும் மென்மலர்
மின்னல் நகைப்பினைப் பாடுவோம்.

துள்ளிக் கவலையைத் தூவெனத்
துப்பிக் கருங்கடல் தோழனை
உள்ளக் கனிவோ டணைந்திட
ஓடும் நதிகளைப் பாடுவோம்.
வெள்ளி வெயில்தரும் வானக
வீதியெங் கும்இசை பாடிடும்
புள்ளினக் கள்ளினை, ஏன்? சுக
போகத்தை யேகவி யாக்குவோம்.

புத்தம் புதுப்பல பொற்புகள்
பூத்துக் குலுங்கிடும் பூவையாய்
நித்தமும் தோன்றி நிலைத்துநம்
நெஞ்சைக் கவர்ந்திடும் நீணிலப்
பத்தினிப் பாவையைப் பாடுவோம்
பாட்டினில் கூட்டநம் பார்வையில்
இத்தனையும் இங்கி ருக்கையில்
ஏன்பொருள் தேடித் தவிக்கிறாய்!

# விதிப்புலவன்

அய்யா! விமர்சகரே!
ஆராய்ச்சி வல்லுநரே!
கொய்யாதீர், என்செடியின்
கொத்துமலர் கொய்தெடுத்துப்
பிய்யாதீர், பூவிதழைப்
பிய்த்தெடுத்துச் சோதனைகள்
செய்யாதீர், உமக்கிதுநான்
செய்யுமொரு விண்ணப்பம்.

காவினுக்குள் ளேபுகுந்தென்
கற்பனைப்பூங் கொம்புகளைத்
தாவிப் பிடித்தொடித்துத்
தன்னிச்சைப் போக்கினிலே
பூவிதழைப் பிய்த்தெடுத்துப்
போட்டுவிட்டுப் போகின்ற
பாவிகள் அப் பூவிதழின்
பரிமளத்தை அறிவாரோ?

செவியாரத் தேனுண்ணச்
செந்தமிழ்ப்பூஞ் சோலையிலே
கவிராயன் பயிராக்கும்
கற்பனைப்பூங் கொம்பினிலே
அவியா அழகுமணம்
அள்ளியிடும் கள்ளிதழ்வாய்க்
குவியாக் கவிமலரைக்
கொய்வதுமே பாவமையா!

உதிப்பவற்றைக் கால்களினல்
உதைத்துதைத்து வீணுக
மிதிப்பவர்க்கிங் கிடங்கொடுத்து
மேன்மையென அன்னவர்வாய்
மதிப்புரைக்கு மதிப்பளித்து
மலைத்திருப்போன் நானல்ல.
விதிப்புலவன் காலத்தால்
விமரிசிப்பான் என்கவியை.

காலக் கணக்குகளால்
கவிராயன் செய்தவற்றின்
சீலச் சிறப்புகளைச்
சீர்தூக்கிப் பார்த்துரைக்க
ஓலக் குரல்காட்டும்
உம்மில் விதிப்புலவன்
சாலச் சிறந்தவன்காண்!
சற்றுமிதில் ஐயமில்லை.

கருப்பொருளை ஆராயக்
கண்ணுடிக் குப்பியிலே
நெருப்பனலில் சூடேற்றி
நீருக்கிப் பின்னெடுத்து
விருப்புடனே ஆராயும்
விஞ்ஞானப் பண்டிதரின்
உருக்குமனப் பான்மையெலாம்
உதவா திலக்கியத்தில்

கேவலமாய் மற்றவர்போல்
　　கீழ்நிலையில் வாழ்ந்தாலும்
சாவறியாப் பாவலியால்
　　சகமுழுதுங் கைப்பற்றி
நாவலிமை கொண்டிந்த
　　நாடாள முன்வந்த
தேவன்நான். விமர்சனமே
　　தேவைஇல்லை என்கவிக்கு.

கல்லால் அடித்தெனது
　　கவிக்குயிலின் சிறகுகளை
எல்லாம் ஒடித்துவிட்டே
　　இலக்கணத்துக் கூண்டிலிட்டுக்
கொல்லாமல் கொன்றழிக்கக்
　　கொஞ்சிவரும் விமர்சகரே!
பொல்லாத தும்செயல்கள்
　　போமையா? நில்லாதீர்!



# அவள் அழைப்பு

முன்னொருநாள் தன்வேலை
முற்றும் முடித்துவிட்டுத்
தன்னந் தனிவழியே
தானாகச் செல்கையிலே
என்னெதிரே தோன்றிட்ட
இயற்கையெனும் மோகினியாள்
புன்னகைவாய் கொண்டெனது
போகும்வழி யைத்தடுத்து;

"காதலரே! வாருங்கள்!
கால்கடுக்க மேல்வியர்க்க
ஆதரிப்பா ரில்லாமல்
ஆட்டிவைக்கும் வல்விதியின்
வேதனையால் பூதலத்து
வீதிவழி யேநடக்கும்
காதலரே! உங்களது
காதலிநான், வாருங்கள்!

"எத்தனைநாள் காத்திருந்தேன்
என்னருமை நாயகரே?
கொத்துமலர் மெத்தையில்நான்
கூடஎதிர் பார்த்திருக்க
இத்தனைநாள் மட்டுமெனை
ஏறெடுத்தும் பாராது
சித்தத்தின் போக்கினிலே
சென்றலைந்தீர் போதுமிது.

"போனதெல்லாம் போகட்டும்
பூவுலகை விட்டெழும்பி
மீனமலர் பூத்தொளிரும்
மேகமரச் சோலையிலே
கூனல்மதி வெண்பிறையைக்
குடையாக்கித் தோள்சுமந்து
வானவில்லின் வீதிவழி
வந்துலவி இன்புறுவோம்.

அந்தரத்து வீதியிலே
ஆருமிலா வேளையிலே
வந்துவிளை யாடமுழு
வண்ணமுடன் வந்துதிக்கும்
சந்திரனைக் காலாரச்
சாடிவிட்டுக் காரிருளில்
பந்துவிளை யாடியபின்
பாருலகி னுட்புகுவோம்,

"மாந்தரெலாம் காரிருளின்
மாயவலிப் பட்டுறங்கத்
தாந்தனியே பிறைத்தோணி
தனையூர்ந்து விண்ணூழி
நீந்தியதில் பூத்தொளிரும்
நீலமலர்க் கிண்ணிதரும்
சாந்தமது மாந்தியபின்
சல்லாபித் தின்புறுவோம்.

"கக்கிருட்டுக் கல்லணையின்
கட்டுடைத்துப் பீறிட்டுத்
திக்குத் திகந்தமெலாந்
தேங்கித் திகைத்திருக்கச்
செக்கச் சிவப்பலைகள்
சீறுமொளிப் பூம்புனலில்
துக்கம் கரைத்திடநாம்
தோய்ந்துபுன லாடிடுவோம்.

"மங்கி இருள்புலரும்
மசக்காலைப போதினிலே
தங்கம் உருக்கிஅதன்
தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பவரும்
இங்கிதப்பொன் வாரியிலே
முங்கிக் குளித்தொளிமீன்
முத்தெடுத்துச் சூடிடுவோம்.

"கொண்டலிடிப் பேரிகொட்டக்
கோகிலங்கள் பாட்டிசைக்க
வண்டினங்கள் யாழ்தடவ
வண்ணமலர்ச் சோலைகளில்
தண்டையிட்ட காலுடன்நான்
தாவிநட மாடஅதைக்
கண்டதும்நீ பாட்டிசைக்கக்
காசினியில் வாழ்ந்திடுவோம்.

வாருங்கள்! காதலரே!
வாழ்வின்பம் காணவந்து
சேருங்கள்! நாமிருவர்
சேர்ந்தணைவோம் வலக்கரத்தைத்
தாருங்கள்! கட்டிலிலே
தாவிவந்தே ஏறுங்கள்!
வாருங்கள்!! கூசாமல்
வாருங்கள்!!!'' என்றழைத்தாள்.

வேதனையின் பாதையிலே
வீணே நடக்குமெனைக்
காதலுடன் கைநீட்டிக்
கண்காட்டி இவ்வாறு
போதனைகள் செய்தெனது
போக்கைத் தடைசெய்ய,
மாதரசி கைப்பிடித்து
மாலையிட்டேன், மணங்கொண்டோம்.

செவியால் அமுதூற்றச்
செந்தமிழில் தேன்பாய்ச்சும்
அவியா அழகியவள்
ஆசைமணங் கொண்டதனுல்
புவிமீதில் மற்றவர்கள்
போல்வெளிக்குத் தோன்றிடினும்
கவிராய ஞய்உலவும்
கடவுளென வாழ்கின்றேன்.

# கடவுளின் பிறப்பு

சாக்கடை சுற்றிலும்
 தேக்குண்டு நாறிடும்
சந்தான வீதியில்
 பொந்தான வீட்டிலே
போக்கற்று சேற்றுமண்
 புழுவாய்க் கிடந்தது
போதுமென் றென்மனப்
 போக்கைத் திருப்பினேன்.

இன்னல் நினைப்புகள்
 பின்னே நகர்ந்திட
எல்லாம் மறந்துளம்
 நில்லாது சென்றிடத்
தன்னந் தனிமையில்
 மின்னல் மிடுக்குடன்
தாவிஇவ் வாழ்வையே
 தாண்டிமுன் னேறினேன்.

கண்டங்கள் சூழ்நில
 மண்டிலத் தப்புறம்
கத்திக் குதித்திடும்
 கடல்களுக் கப்புறம்
அண்டபகி ரண்டம்பிர்
 மாண்டத்தி னப்புறம்
அகிலாண்ட கோடிக்கு
 மப்பாலு மோடினேன்.

எண்ணத் திழுப்பிலே
மண்ணில் கிடந்தநான்
எல்லை வரம்புகள்
எல்லாங் கடந்தபின்
விண்ணில் புகுந்ததில்
மண்ணைக் கலந்திடும்
விந்தை ரசாயனம்
சிந்தையில் பட்டது.

உள்ளத் துணர்ச்சிகள்
துள்ளிக் குதிக்கவும்
ஒட்டாத மண்ணையுங்
எட்டாத விண்ணையும்
கள்ளக் கருத்துடன்
மெள்ளக் கலந்ததில்
கருவுற்ற நெஞ்சுபின்
கடவுளைப் பெற்றது.

மண்ணில் மயக்கமே
விண்ணின் துறக்கமாம்
மானிடன் செய்ததே
வானிடைத் தெய்வமும்
கண்ணற்ற பாழில்நாம்
காணாத சுவர்க்கமும்
கற்பனைக் கெட்டாத
கடவுளும் ஏதுகாண்!

# புதுக் கருத்து

இத்தனைக்கும் மத்தியிலே
என்கவிதைக் குள்ளேதும்
புத்தம் புதியவொளி
பூத்துளதோ என்றறியும்
சித்தத் துடிப்பினிலே
சீர்தூக்கிப் பார்ப்பதற்காய்ப்
புத்தகத்தின் ஏடுகளைப்
புரட்டுகின்ற வாசகரே!

இல்லை; இதி லும்புதுமை,
ஏதுமில்லை; நானின்னும்
மெல்லமெல்லக் காலூன்றி
மேன்மேலே முன்னேறிச்
செல்லுகின்ற போக்கினிலோர்
சிறுபடிதான். ஆம்! இறுதி
எல்லையினைக் கண்டறிய
இன்றுமெனக் கேலவில்லை!

இன்னாள் வரைத்தினமும்
ஏதேதோ தன்மனசில்
முன்னாகத் தானரும்பி
முறுவலிக்கும் புதுமைகளைத்
தன்னா லியன்றவரை
தண்டமிழால் கோத்திணைத்தோர்
பொன்னார மாக்கிடவே
புந்திதரு மாறுகின்றேன்.

இன்றைமலர் நாளைக்கோர்
இழிந்தசரு காகிவிடும்
சென்றதெலாம் இன்றுபழஞ்
சிறுகனவாய்த் தேய்ந்தொழியும்;
கன்றினிலோ எதிர்காலக்
கறவையுரு வாகிவரும்;
என்றுமுயன் றேறுமிதில்
எங்குயர்வைக் காண்பதுநான்?

கண்டதெலாம் மேன்மேலே
காண்பதற்கோர் தூண்டுதலாம்.
கொண்டனவும் நாளைநமைக்
கூடுதற்கோர் புத்துணர்வாம்.
விண்டதெலாம் வருங்கால
வித்தகத்தின் முற்படியாம்,
மண்டலத்தி லேயுளவும்
மானுடத்தின் காதையிதே!

எதிர்காலம் நிகழ்காலத்
தியல்பைத் திருப்பிவிடும்;
கதிரோடும் பாதையிலே
கனவாகும் கண்டவெலாம்!
புதிதாகத் தோன்றுவதும்
பூர்வீக மாகிவிடும்.
புதிர்போலப் போகுமிதன்
போக்குறுதி யாரறிவார்?

தப்படிக்குத் தப்படியித்
தாரணியின் வீதிவழி
செப்பரிய புத்தெழிலின்
செஞ்சுடர்தான் காண்கின்றேன்.
எப்படியோ இச்சையுடன்
இகவாழ்வு எனுந்தெருவில்
இப்படியே சென்றிடுநாம்
எதுபுதிதென் றோதுவதோ?

அன்னாள் தொடங்கிமனத்
தாவலினால் ஏதேதோ
என்னா லியன்றவரை
இயற்றினேன்; என்றாலும்
இன்னுமொரு பொற்கவிதை
எனக்கெழுதக் கூடவில்லை.
முன்னாள் படைப்பெல்லாம்
மூளிப் படைப்பிணமாம்.

முற்பகலி லேமுளைத்தென்
மூளைதனி லேகிளைக்கும்
கற்பனையைக் கவியாக்கக்
கருத்தூன்றிக் கோலெடுத்தால்
அற்புதமாய் அன்னதிலும்
அழகிெளி பழகிடுமோர்
சொற்பனத்தைக் கண்டுமனம்
சொக்கிமரம் ஆகின்றேன்,

எழுதிவிட்ட பாவினத்தை
இன்றைக்கு நான்படித்தால்
பழுதுபட்டுத் தானுளவே;
பழந்தவற்றைச் செப்பனிட்டு
உழுதுழுது விதைக்கின்றேன்
உண்மையில்என் சொல்என்று
முழுவளர்ச்சி எய்திடுமோ?
முடிவறியக் கூடிடுமோ?



# காசுக்கா?

அந்திப் பொழுதல்லும்
மந்தாரை போல்அழகைச்
சிந்தும் சிவப்பிதழும்
சேல்போல் இருவிழியும்
பந்தான மார்பகமும்
பட்டணைய கட்டுடலும்
கந்தமலர்ப் பூங்குழலும்
காமமெனுந் தூண்டிலிட.

முன்ளுெருநாள் தன்வீட்டின்
முன்னின்ருள் நான்காண
மின்னலெனக் கண்ணதிரப்
புன்னகைசெய் தாள்பின்பு
''உன்ஞசை நீக்குகிறேன்
ஓரிரவுக் குக்காசு
என்னஎனக் குத்தருவாய்?''
என்ருளத் தாசிப்பெண்.

காசுக்கா பெண்ணின்பம்!
காலத்தே மண்ணுகும்
மாசுக்கா எழில்ரோஜா
மலர்போன்ற இதழ்முத்தம்!
யோசித்தேன் யோசனைக்கே
எட்டவில்லை அவ்வின்பம்
தாசிப்பெண் காசுக்குத்
தருவதுவும் மலிவன்ருே?

அழகில்லா உடலெனினும்
அணைகின்றார். நம்மோடு
பழகித்தன் இதழூறல்
பருகென்று தருகின்றாள்
எழிலூறும் தன்மேனி
இன்பத்திற் கிணையாக
இழிவான காசைத்தான்
ஏற்கின்றாள் தாசிப்பெண்!

ஆவலுடன் போய்நின்றால்
அன்புடனே வரவேற்றுச்
சேவகிபோல் இட்டதெல்லாம்
செய்பவளா இழிந்தவள்! இத்
தேவடியா ளையடையத்
தேடுவதா ஒருபெரிய
பாவமெனப் பேசுகிறாய்
பாழுலக மானிடனே!



நட்ட நடுஇரவு
நான்எனது சிற்றறையின்
கட்டிலிலே தனியாகக்
கண்ணுறங்கிக் கொண்டிருந்தேன்
எட்டத்தி லோர்ஆந்தை
எங்கோ அலறுமொலி
தொட்டுவருங் குளிர்காற்று
துயிலைக் கலைத்துவிட

என்னவோ—எப்படியோ
என்றுமிலா வோரச்சம்
தன்னுளத்தைப் பேய்போலத்
தாவிப் பிடித்தழுத்தக்
கன்னங் கருக்கிருளில்
காற்றசைத்துத் தள்ளிவிடும்
சன்னல் கதவுகளின்
சந்துவழி ஏறிட்டேன்.

பித்தனெவ னோதனது
பெட்டியிலே வைத்திருந்த
முத்துடனே வைரங்கள்
முழுதும் எடுத்திறைக்கச்
சித்தம் புரண்டவனின்
செயல்நினைந்து பாழிருளின்
மத்தியிலே சிதறியவம்
மணிகள் சிரிப்பதுபோல்

கன்னங் கருக்கிருளில்
கண்ணறியா விண்ணிடையே
மின்னி மினுமினுக்கும்
மீனினத்தின் கூட்டங்கள்,
புன்னகைத்து நிற்பதுவோர்
புதிர்போலத் தோன்றியது.
இன்னும்தேய் பிறைமதியம்
எழுந்திருந்து வரவில்லை.

துக்கக் கறைமறுவால்
தொய்வடைந்தார் தம்முகம்போல்
கக்கிருட்டு நாற்புறமும்
கண்ணை மறைக்கிறது.

ஊழி முடிவதனுள்
ஓய்ந்தொடுங்கி விட்டதுபோல்
பாழிருளின் மத்தியிலே
பாரே துயில்கிறது.

கட்டிலினை விட்டிறங்கிக்
கதவைத் திறந்துவிட்டு
மொட்டைமச்சின் மேலேறி
மூலையிலே போய்நின்றேன்.

மெல்லமெல்ல எதிர்வீட்டு
மேற்கூரை மேலேறிச்
செல்லரித்த சல்லடைபோல்
சிறுபிறையும் தோன்றியது.

தூக்கிவரும் பிணத்திடையே
தூவிவிட்ட மல்லிகைகள்
போக்கிறந்த நிலையதிலும்
புன்னகைத்து நிற்பதுபோல்

தேய்பிறையின் பக்கலிலே
தேங்கிவிட்ட மீன்களெலாம்
ஓய்வடைந்து வான்வெளியில்
உறங்கிக் கிடந்தனவே

ஓடிவரும் சிறுமுகில்கள்
ஒன்றிரண்டைத் தன்னொளியால்
சாடித் துரத்திவிட்டுச்
சந்திரன்முன் னேறுகிறன்.

தூக்கமில்லை என்றாலும்
தோய்ந்தபல நினைவுகளின்
தேக்கத்தே, என் நெஞ்சில்
தெளிவுற்று நின்றிருந்தேன்.

ஆளரவம் இல்லாமல்
அருகிருக்கும் வீதியிலே
ஊளையிடும் ஒருவெறிநாய்
ஓலமதோ கேட்கிறது.

கொட்டும் கொடும்பனியில்
குளிர்காற்றின் மத்தியிலே
மொட்டைமச்சில் நின்றிருக்க
முடியவில்லை, இறங்கிவந்தேன்.

விதவிதமாய் எண்ணங்கள்
வேதனையின் வட்டமிடக்
கதவைத் திறந்தறையின்
கட்டிலிற்போய் உட்கார்ந்தேன்.

படுக்கைக் கெதிரிலெனைப்
பார்த்திருக்கும் சன்னல்களின்
இடுக்குவழிப் பிறைமதியம்
எட்டிஎட்டிப் பார்க்கின்றான்.

நீண்ட உறக்கத்தே
நிழற்படம்போல் பாழாகி
மாண்டதுபோல்—ஊர்முழுதும்
மயங்கிக் கிடக்கிறது.

கோட்டான் இரண்டுசிவன்
கோயிலின்மேற் கோபுரத்துக்
கேட்டார் மனம்நடுங்கக்
கெக்கலித்து வீறிடவும்

உள்ளத்தைப் பிய்த்தெடுக்க
உறுமிச் சுழன்றுவரும்
கொள்ளிவாய்ப் பேய்களைப்போல்
கூடிவந்த எண்ணங்கள்

தாவுகின்ற எண்ணத்தின்
தலையைப் பிடித்துலுக்கும்
சாவுணர்ச்சி யைத்தொடர்ந்து
சாடவரும் பெரும்பீதி.

எவருமறி யாதபடி
எப்புறத்தி லோஒளிந்து
சுவர்க்கோழி ஒன்றெங்கோ
சுதிகூட்டி இசைமீட்டக்

கொல்லனுலைத் தீபோலக்
கொதித்தெழுந்த எண்ணங்கள்
கல்லிடவும் என்னிதயம்
கடிகாரம் போல்துடிக்க,

கிண்டிவிட்ட செந்தழல்போல்
கேவிஎழும் சாவுணர்ச்சி
சுண்டிவிடப் பம்பரம்போல்
சுற்றியதென் நெஞ்சகமே.

பின்னிவரும் பீதிகளின்
பேய்பிடிப்பி னுள்பட்ட
இன்னிலையின் மத்தியிலே
என்னையே நான்மறந்தேன்.

உலையனலின் மெருகெனவே
உருகியுளத் தெண்ணங்கள்
அலைஅலையாய்ப் பீறியுளத்
தார்த்தெழுந்து சீறியது:

கொழுத்துயர்ந்த மனச்செடியில்
குறுகுறுக்கும் உணர்ச்சிவளம்
குலைகுலையாய்க் காய்காய்த்துக்
கொம்பினிலே கனிந்திருக்கப்
பழுத்தபழம் தனைக்கொணர்ந்தோர்
பாத்திரத்தி லேபிழிந்து
பருகிஅதன் இன்சுவையைப்
பார்த்துமனம் களித்திடுமுன்—

சிந்தையிலே தோன்றினவாய்ச்
சிதறிக் கிடந்திடுமென்
சிந்தனைப்பொன் முத்தையெலாஞ்
சேர்த்துக் கொணர்ந்தகாய்ச்
செந்தமிழில் நூற்றெடுத்துச்
செப்பனிட்ட பாவினிலே
சீராகக் கோத்திணைத்தென்
சென்னியிலே சூடிடுமுன்—

நீல்நிற வானேட்டில்
நீணிலத்தார் மனங்கவர
நித்தம் கவிதைபல
நியதிகளில் நீட்டிவரும்
காலக் கவியரசன்
கையுயர்த்தி அஞ்சலிக்கக்
கவிஎழுதி மண்ணிடைஎன்
கைவரிசை காட்டிடுமுன்—

சாவழைத்தால் என்செய்வேன்?
சகலமும்தான் பாழ்த்திடுமே!
சகத்திடையே என்நெஞ்சம்
சார்ந்திருக்க நினைந்தவெலாம்
ஆவல் அடங்கியுளம்
ஆனந்தங் காணுமுனம்
அவசரமாய்ச் சாவழைத்தால்
அப்பொழுதென் செய்திடுவேன்?

எண்ணமெலாம் பாழாமோ?
இச்சையெலாம் பொய்யாமோ?
ஏட்டினிலே ஏற்றமுறு
என்னருமைக் கற்பனைகள்
மண்ணுடனே மண்ணாக
மாண்டுறங்கும் அப்பொழுது
மானிடர்க்குப் பொய்யாகச்
சூனியத்தில் பாய்ந்திடுமோ?

என்னுளத்தின் நினைவுகளே!
எழுந்தருகே வாருங்கள்!
தன்னந் தனிமையிலே
தாரணியை விட்டெழும்பிக்
கன்னங் கருக்கிருளில்
காலனது கைபிடித்து
முன்னடக்கு முன்எழுந்தென்
முகம்பார்க்க வாருங்கள்!

வெப்புகின்ற கோடையிலே
வீசுமிளந் தென்றலைப்போல்
செப்பரிய முதலிரவின்
சேர்க்கைதரும் இன்பினைப்போல்
ஒப்புவமை யற்றமதி
ஒளிக்கிரண வாரியைப்போல்
இப்பொழுதென் நினைவுகளே
எழுந்தருகே வாருங்கள்!

ஈனக் கவலைகளை
எல்லாம் உதறிவிட்டு
மோனத்து வீதியிலே
முன்னேறிச் செல்லஎனைக்
கானக் கவிஇசைத்துக்
கனிவோ டழைக்கவரும்
வானத்துத் தூதுவர்காள்
வாருங்கள்! வாருங்கள்!

காதலித்த என்னருமைக்
கலைமகளின் பரிவிடையே
பேதமிலாக் கவிதைகளாம்
பிள்ளைகளின் சூழலிலே
சீதளத்துப் போதைதரும்
சிந்தனையின் பாதையிலே
சாதல்மிக நன்றதனால்
சாந்திதர வாருங்கள்!

மூலத்து மேட்டினிலே
முன்னொருநாள் உற்பவித்துக்
கோலக் கிளைபரப்பிக்
குதூகலித்து வாழ்ந்ததன்பின்
காலக் கருங்கடலில்
கலந்திணைந்து ஒன்றாக
ஓலமிட்டு ஓடிவரும்
உயிர்நதியின் சங்கமத்தில்

இனிமைதரும் கைப்பினையும்
இன்புதரும் துன்பினையும்
தனிமையிடைப் பலகிளையும்
தாழ்விடையே வாழ்வினையும்
கனிவுடனே தந்தெனை இக்
காலம்வரை சூழ்ந்திருந்து
மனிதனென ஆக்கியஎன்
மதலைகளே! உமக்காசி!

சித்தக் கவலைகளால்
சிந்தனைகள் தேங்கையிலும்
எத்தனையோ சிக்கல்வழி
இடைமறிக்க நிற்கையிலும்
மொத்துகின்ற துன்புகளால்
முடமாய்க் கிடக்கையிலும்
வித்தகத்தின் கைநீட்டி
வெம்புமெனைத் தூக்கிவிட்டு

முன்னமெனை மாலையிட்டு
மோகமுட னேகலந்து
பின்னிருத்தி விட்டகன்ற
பெண்ணரசி! கலைமகளே!
என்னருமைக் குழவிகளாய்
ஏட்டினிலே கண்வளரும்
வன்னக் கவிதைகளே!
வந்தபடி செல்லுகிறேன்.

வானகத்தை எட்டுதற்கு
வாழ்க்கைவழி விட்டெழும்பும்,
நானறிவேன். இன்னுமொரு
நாழிகைதான் என்வாழ்வு
தானதற்குள் உங்களுடன்
தனித்தனியே அளவளவித்
தேனனைய அவ்வின்பில்
திளைத்திருக்கப் பொழுதேது!

படுத்திருக்கும் என்னுடைய
படுக்கையரு கேவந்து
அடுத்தமர்ந்து சாகுமெனை
அன்பொழுகும் தனதுவிழி
எடுத்தொருகால் நோக்கியபின்
ஏகிடுங்கள். இங்கெதையும்
விடுத்தகலும் எனக்கதுவே
விண்ணின்பம் நல்குவது.

மங்கிருளின் வெண்ணிலவில்
மதுமலர்கள் உதிர்வதுபோல்
இங்கெனது சிற்றறையில்
என்னருகே நாற்புறமும்
பொங்குமொளிப் பொலிவுடனே
போந்தமர்ந்து நோக்குகின்ற
உங்களது சூழலிலென்
உயிரடங்கிப் போகட்டும்,

வாருங்கள், நினைவுகளே
வாஞ்சையுடன் வந்தொருங்கு
சேருங்கள். சேர்ந்திணைந்து
சீக்கிரமாய் என்முகத்தைப்
பாருங்கள். இப்படுக்கைப்
பக்கலிலே வந்தாவல்
தீருங்கள். உங்கள் மனம்
செல்விகளே தேருங்கள்.

இமைஇறந்த காட்சியிலே
என்னிதயம் சொக்கிவிடச்
சுமைஇறக்கி வைத்துவிட்டுச்
சும்மாட்டை யும்உதறுஞ்
சமயமிதில் சற்றிருந்து
சல்லாபம் செய்தகல
எமதருமை எண்ணங்காள்
எழுந்தருகே வாருங்கள்.

பாசமுடன் துதிபுரியும்
பத்தரெலாம் போய்மறையப்
பூசனைசெய் திட்டமலர்ப்
புதியமணம் போதையிட
ஓசைதரும் வெள்ளிமணி
ஒலிஇழந்த சாந்தியிலே
ஈசனது சன்னதியில்
இரவினிருட் சாமத்து

புத்துருக்கு நெய்யூற்றிப்
பூந்திரியை ஏற்றிவிட
முத்துச் சுடர்விசிறி
முறுவலித்து நின்றபடி
சத்தமிலாச் சாமஇருட்
சாந்தியிலே துஞ்சிவிடும்
குத்துவிளக் கெழிலொளிபோல்
குளிர்ந்துவிழும் எனதாவி.

பட்டெடுத்து மேல்போர்த்துப்
பாலூற்றி வாய்துடைத்துத்
தொட்டணைத்துக் கண்களில்நீர்
துளிர்த்திருக்க நாக்குழறக்
கட்டிலினைச் சுற்றிநின்று
கனிவுடனென் முகம்பார்க்கும்
கட்டிளமைக் காதலியே!
கனிவுடைய குழவிகளே!

இரவெல்லாம் என்மூச்சு
இழைவதையே பார்த்திருப்பீர்!
சுரந்தணிந்து தேகத்தின்
சூடழிந்து சில்லிடவும்
எண்ணங்கள் அலைஅலையாய்
எழுந்திதயப் பொம்மலிடக்
கண்ணிரண்டும் இங்கெனையே
கண்டபடி நின்றிருப்பீர்!

ஏக்கம் துயரமிவை
இரண்டிலுமே தமதுள்ளம்
தூக்கமற்று வீணாகத்
துடிதுடிக்க நின்றிருப்பீர்
தூங்கும் பொழுதினில்நான்
துஞ்சினனென் றையுறுவீர்!
நீங்குமுயிர் போம்பொழுதை
நீரறியக் கூடுவதோ?

இப்படியே இரவினிருள்
எல்லைவர அப்பொழுதும்
அப்படியே கிடந்திடுமிவ்
வாகத்தைத் தீண்டிடுவீர்.
கண்ணிரண்டும் மூடிவிடும்
காற்றும் அடங்கிவிடும்
மண்ணில் பொழுதெனக்கு
மறுபடியும் விடியாது.

அடங்குமுயிர் ஒடுங்குவதில்
ஆசையெலாம் ஒவ்வொன்றாய்
அழிந்துவிட வும்முடிவாய்
ஆழ்ந்துறங்கப் படுக்கையிலே
முடங்கிவிட்ட என்னுடைய
முகத்தினைப்போல் வானகத்து
முகடே வெளுப்பேற
முன்னிருட்டில் ஆகாயத்
தடமுழுதும் கொப்புளித்துத்
தளதளக்கும் வைசூரித்
தாக்கிலெழும் புண்களெலாம்
தழும்புவிட்டுக் காய்வதுபோல்
திடங்குலைந்த மீனினமும்
தேய்பிறையுஞ் சாம்பிடக்கீழ்த்
திக்கிலிருட் தாய்சிதைக்குத்
தீமூட்ட வருங்கதிரோன்

சுட்டெரிக்கக் கீழ்த்திசையில்
சூரியன்கை அள்ளிஇடும்
செக்கழலில் சுக்கிருளே
மக்கிவிழ லாயதுவே!
வெட்டிவந்த கட்டைகளின்
விறகைப் பிரித்தொருபால்
வெய்யிலிலே காயவைத்து
விட்டுவந்த கிழவியதோ!

தட்டிவைத்த வரட்டிகளைத்
தனித்தனியே பேர்த்தெடுத்துத்
தரையினிலே ஒவ்வொன்ருய்த்
தலைதிருப்பிப் போடுகிருள்.
தொட்டிழுக்கும் தென்றல்வரத்
தோட்டத்துத் தென்னைமரம்
துணைக்கிருக்கும் மூங்கிலைத்தான்
தொட்டணைக்கும் மட்டையினுல்.

கொத்தி க் குடர்கிழித்துக்
கூறுபல வாய்பிரித்துக்
கொக்கரித்துத் தின்பதற்குக்
கூடிவரும் கூளிகள்போல்
எத்தனையோ எண்ணங்கள்
இச்சையுட னேகுதறும்
ஈடறியா வாதனையின்
ஏக்கத்தும் தேக்கத்தும்

நத்தையினைப் போற்காலம்
நகர்ந்துசெலு மாஞலும்
நன்ருய் விடிந்ததிலோர்
நாளும் பிறந்துவிடும்
இத்தனையும் காணுமனத்
தேக்கப் படபடப்பில்
இழவுப் பறைமுழக்கம்
இருதயத் தொலிக்கிறது.

காலமதோ! அப்புறத்துக்
கதவைத் திறக்கிறது
காலிதற்கு மேல்நடக்கக்
கண்முன்வழி காணவில்லை,
கோலிவைத்த பாதைஇதற்
குள்ளே முடிந்ததுவோ?
கொடுத்துவைத்த தைக்கொடுத்தோன்
எடுத்துவிடத் துடிக்கின்றான்.

சோலியற்று நம்முடனே
சுற்றித் திரிந்துவரும்
சோம்பேறி யாமியற்கை
போம்பாதை மத்தியிலே
வேலியிட்டு மூடிவிட்டு
வீணே அருகிருந்து
விளையாட்டுப் பிள்ளையைப்போல்
வேடிக்கை பார்க்கிறது.

கூட்டைத் திறந்ததற்குள்
கூம்பிக் கிடந்தவுயிர்க்
கோகிலத்தைச் சிறைவிடுக்கக்
குரவன் துணிந்துவிட்டான்.
பாட்டைஎல்லை காண்கின்றேன்
பதைபதைத்துப் பயனில்லை,
பாசத் தளையறுத்துப்
பரமபதம் செல்லுகிறேன்.

வேட்டைஇட்டு மண்ணுலக
வீதிவழிப் பின்தொடரும்
வேதனைஇத் தேகமொடு
வீங்கிஎழும் செந்தழலில்
காட்டத்து மத்தியிலே
கரியாகி வெந்ததன்பின்
கைப்பிடிநீ றாகிவிடக்
கதையே முடிந்துவிடும்.

மருளுகின்ற நேரம்இதோ!
மதிஇறந்த கதியிதனில்
வெருளுகின்ற வெண்மேக
வீதிவழி வான்வெளியில்
உருளுகின்ற கோளங்கள்
உடுக்கணமாய்க் கண்சிமிட்டும்
இருள்கலந்த வொளியிடைநான்
எங்கேயோ செல்லுகிறேன்.

திரும்பிவர வழியேதும்
தெளிவாகத் தெரியவில்லை
வரும்பொழுது மண்ணுலக
வாயிலிலே போட்டிருந்த
இரும்புக் கதவிருக்கி
எவரோதா ழிட்டுவிட்டார்
கரும்புகைக்குள் நான்தனியே
காணமல் செல்லுகிறேன்.

சென்றவர்கள் மீண்டதில்லை
சேதிவந்து சொன்னதில்லை.
என்றைக்கோ இங்குற்றேன்
எப்படியோ வாழ்ந்துவிட்டேன்.
இன்றுடன்என் நாள்முடிய
இறந்துவிட்ட மற்றவர்கள்
சென்றஇடந் தனைநோக்கிச்
சீக்கிரமாய்ச் செல்லுகிறேன்.

மாலையிலே பூப்பெய்தி
மல்லிருளில் வாழ்ந்திருந்து
காலைஇளந் தென்றல்படக்
கருகிநில மேலுதிரும்
சோலைமலர்ச் சரகேபோல்
சோகமொடித் தேகம்விழ
மேலைத் திசைவெயிலாய்
மேலேறிச் செல்கின்றேன்.

ஊனோ டிருந்தவுடல்
ஓய்ந்துறங்கிச் சவமாக
வானோக்கி மண்ணறியா
வழிநடையில் மிகவிரைவாய்
மீனோடு திங்கள்வரும்
மேகமலைக் காட்டுவழி
ஏனோ தெரியவில்லை
எவ்விடமோ செல்லுகிறேன்.

# என்னரும் வாசக!

ஆண்டுகள் பற்பல தாண்டிக் கழிந்த பின்
அனல்வாயி லென்னுடல் கனவாய் முடிந்தபின்
தீண்டுவா ரற்றவென் தீங்கவிப் பூவெலாம்
தேசத்து வீதியில் தூசாய்க் கிடக்கையில்
மாண்டுமண் ணானஎன் மலரை முகர்ந்ததன்
மாளா மணத்தினுக் காளாகி இன்புற
மூண்டுதன் நெஞ்சினைத் தூண்டிடும் ஆசையால்
முன்வரும் சோதர! என்னரும் வாசக!

எட்டடிச் சிதையிலே எல்லாம் முடிந்தது.
இறுதியில் ஒருபிடித் திருநீ றிருந்ததும்
ஒட்டாது கொள்ளிடத் தோடும் புதுப்புனல்
உண்ணக் கரைந்ததில் மண்ணில் கலந்தது.
மொட்டாய் முகிழ்த்தது மலராய் விரிந்தபின்
முடிவில் உதிர்ந்ததோ வடிவற்று விட்டது.
முட்டாக ஓர்பெருந் திட்டாக ஈண்டுநின்
முன்னே கிடக்குமிம் மண்ணே மிகுந்தது

கண்கண்ட காட்சியோ கனவாய் முடிந்தது
காதுகள் கேட்டதும் போதோடு போனது
உண்ணின்ற இச்சையும் உயிரோ டகன்றது
ஒருபிடிச் சாம்பலாய் உடலும் மறைந்தது
மண்ணில் பிறந்தது மண்ணில் கலந்தது
மதியோ டிருந்தது விதியோ டழிந்தது
எண்ணங்கள் தாம்மிகுந் திங்கின்று மட்டிலும்
இத்தனை பேதத்து மத்தியில் வாழ்வன.

நில்லாத வாழ்க்கையின் நிலையற்ற போக்கினை
நீந்தமுன் வந்தவர் மாந்தருள் யாவரே!
''எல்லாம் முடிந்த''தென் றெண்ணும் ஏ! வாசக!
இல்லைநான் இன்னமும் இங்குதான் வாழ்கிறேன்.
இல்லாத இன்பினை எல்லாம் இணைத்தபின்
இசைகொண்ட செந்தமிழ் மிசையான் எழுப்பிடச்
சொல்லா லமைந்தஇச் சொர்க்கத்தி னுட்புகப்
பொல்லா எமன்கரம் பூட்டைத் திறக்குமோ?

காகிதக் கட்டினைக் கரையான் அரிக்கலாம்
கற்பனைச் சித்திரம் சொற்பனம் ஆகலாம்
போகின்ற போக்கிலே புதுமை பிறக்கலாம்
புதுமையில் பழமைதன் முதுமையைக் காணலாம்
வேகின்ற தீயுடன் தேகம் கலக்கலாம்
விலையற்ற பொருளெலாம் நிலைகெட்டு மாறலாம்
ஆகின்ற யாவுமே அழிவில் அடங்கவே
ஆயினும் நானதற் கப்பா லிருப்பவன்.

கண்முன் இருந்ததன் கட்டழிந் திட்டதால்
காட்டத்தில் வெந்ததே கடைசியா மென்பதோ?
பண்மக்கி வீழ்வதோ பாக்களோ மாள்வன
பட்டுக் கிடந்தபுள் கட்டை அறுத்ததும்
எண்ணற்ற காதமிங் கெங்கும் உலாவிடும்
இச்சையா லென்பதை ஏனோ மறந்தனை?
உண்மையில் இங்கிந்த மண்மேல் இதன்வரை
உயிர்போவ தன்றியே உயிர்சாவ தேதுகாண்

ஆயிரம் கற்பனை ஆர்த்தெழும் நெஞ்சினன்
அழகோ டிழைவுறப் பழகிடும் கண்ணினன்
தீயின் செழுஞ்சுடர் ஆயசெங் நாவினன்
திக்கெட்டு மாகிய திண்டோ ளுரத்தினன்
வாயின் வரம்பெனும் வார்த்தைக்கு மீறிய
வளமிக்க தாயதோர் இளமைக்குள் நிற்பவன்
மாயினும் சாவினுள் மங்காது வாழ்பவன்
ஆயினும்—வாசக! மனிதன்நான்! மனிதனே!



...URAI-625...